## ஒருவரையொருவர் கனம்பண்ணுங்கள்

**வாசிக்க: ரோமர் 12:10**

கனம்பண்ணுதல் என்பது மதித்தல் என பொருள்படும். எல்லொரும் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருக்கிறபடியால் எவரும் நமக்குக் கீழானவர்களல்ல. எனவே நாம் சமமாக மதிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் மற்றவர்களை நம்மைவிட உயர்வாக மதிக்க வேண்டும்.

பிறரை நாம் மதிக்கிறோம் என்பது வெறுமனே வணக்கம் சொல்லுவதும் வெறும் மரியாதைக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்துவதுமாத்திரமல்ல. கனம்பண்ணுதல் என்பது ஒரு நபரைக்குறித்து நமது மனதில் எவ்விதமான நன்மதிப்பு உயர்வான எண்ணமுடையவர்களாய் கொண்டிருக்கிறோம் என்பதில் அடங்கியிருக்கிறது. அதுமாத்திரம் அல்ல, அந்த நபர் இல்லாத போதும் அவரைப்பற்றி எவ்வாறு, என்ன பேசுகிறோம் என்பது முக்கியம். அவர் இல்லாத போதும் அவரைப்பற்றி உயர்வான எண்ணமுடையவராக இருக்கவேண்டும்.

படித்தவரிடம் பழகுவதைப்போலவே படிக்காதவரிடமும் பழகுவதுதான் மதிப்பதாகும்! பணக்காரடன் பழகுவதைப்போலவே பணமில்லாதவரிடமும் பழகுவதுதான் மதிப்பதாகும்! நமக்கு உதவி செய்தவர்களிடம் பழகுவது போல் உதவி செய்யாதவரிடமும் பழகுவதுதான் மதிப்பதாகும்! நல்ல நிலையில் இருப்பவர்களிடம் பழகுவதைப்போலவே நலிந்தவர்களிடமும் பழகுவதுதான் மதிப்பதாகும்!

சரீரப்பிரகாரமாக ஒருவர் தினமும் உடற்பயிற்சி செய்யும்போது அவருடைய உடல் தசைகள் பலமடைகின்றன. அதைப்போலவே நாம் ஆவிக்குரிய காரியங்களில் தொடர்ந்து பயிற்சி செய்யும்போது (நாம் கற்றுக்கொண்ட காரியங்களை நடைமுறைப்படுத்தும்போது) நமது பக்தியும் பலப்படுகிறது. ஆவிக்குரிய வாழ்க்கை என்பது பக்தியில் (அ) ஆவிக்குரிய செயல்களில் வளர்ந்து கொண்டே இருப்பதாகும். 1பேதுரு 2:2-3

**கேள்விகள்:**

1. கனம்பண்ணுதல் என்றால் என்ன?

2. பிறரைப் பற்றி எப்பொழுதெல்லாம் உயர்வான எண்ணமுடையவராக இருக்கவேண்டும்?

3. பிறர்மேல் உள்ள நமது மரியாதையை நாம் எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தலாம்?